கிருஷ்ணர் வேடத்தில்...



கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு, சென்னை மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன் - குருவாயூரப்பன் கோயில் பூஜை கடையில் விற்கப்படும் கிருஷ்ணர் வேடத்துக்கான பொருள்களை அணிந்து மகிழும் சுட்டிக் குழந்தை ஸ்ரீநிதி.

# ஆவின் மாநில மைய ஆய்வகக் கட்டடம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்

சென்னை, ஆக. 16: சென்னை மாதவரத்தில் அதிநவீன பகுப்பாய்வு கருவிகளுடன், ஆவின் நிறுவனத்துக்கான மாநில மைய ஆய்வகக் கட்டடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், பால் மற்றும் பால் பொருள்களின் தரத்தை உறுதி செய்ய அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, தேசிய பால் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், சென்னை மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் 17 ஆயிரத்து 422 சதுர அடி பரப்பில் அதிநவீன பகுப்பாய்வு கருவிகளுடன் ரூ.8 கோடியில் ஆவின் மாநில மைய ஆய்வகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வகத்தில் உயர் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி அனைத்துத் தர பரிசோதனைகளையும் மேற்கொள்ள முடியும். மேலும், மாவட்ட ஒன்றியங்கள், இணையங்களில் இருந்து பால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் தரம் உறுதி செய்யப்படும்.

இதன்மூலம், நுகர்வோர்களுக்கு தரமான பால், பால் பொருள்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும். இந்நவீன ஆய்வகமையத்தை தலைமைச் செயலகத்திலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், சேலம், கோவை, கன்னியாகுமரி, தேனி, ஈரோடு, திருவண்ணாமலை, மதுரை, விழுப்புரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில், பணிக் காலத்தில் இறந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனத்துக்கான உத்தரவையும் முதல்வர் அளித்தார். இந்த நிகழ்ச்சியில், பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் ஆவின் மாநில மைய ஆய்வகக் கட்டடத்தை தலைமைச் செயலகத்திலிருந்து செவ்வாய்க்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, கால்நடை பராமரிப்புத் துறை செயலாளர் ஆ.கார்த்திக், ஆவின் நிர்வாக இயக்குநர் ந.சுப்பையன்.

# 180 கோயில்களில் திருப்பணிகள்: மாநில வல்லுநர் குழு ஒப்புதல்

சென்னை, ஆக. 16: தமிழகத்தில் தொன்மையான 180 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்குவதற்கு மாநில அளவிலான வல்லுநர் குழு ஒப்புதல் அளித்தது.

தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாமல் புதுப்பித்தல் தொடர்பான மாநில அளவிலான 36-ஆவது வல்லுநர் குழுக் கூட்டம் சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், அதிதிருவரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோயில், தென்காசி மாவட்டம், பண்பொழி சிவந்தி விநாயகர் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பெருமாள் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் கண்டியூர் காளியம்மன் திருக்கோயில், திருவிடைமருதூர் தொப்பை பிள்ளையார் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சித்தி விநாயகர் திருக்கோயில் ஆகியவை உள்பட 180 திருக்கோயில்களில் திருப்பணிகளை தொடங்குவதற்கு மாநில அளவிலான வல்லுநர் குழு கூட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பரிந்துரை அடிப்படையில் இந்தத் திருக்கோயில்களில், திருப்பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும். கூட்டத்தில் இணை ஆணையர் (திருப்பணி) பொன். ஜெயராமன், ஆகம வல்லுநர் குழு உறுப்பினர் கோவிந்தராஜ பட்டர், ஆனந்த சயன பட்டாச்சாரியர், கே.சந்திரசேகர பட்டர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ரூ.6 கோடி நடைமேம்பாலம் திறப்பு



சென்னை நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையின் இருபுறமும் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தில் நிழற்கூரை அமைத்து, அழகுற வரையப்பட்டுள்ள வண்ண ஓவியங்கள்.

சென்னை, ஆக. 16: சென்னை நுங்கம்பாக்கத்தில் சுரங்கப் பாதையின் குறுக்கே ரூ. 6.17 கோடி செலவில் கட்டப்பட்ட நடைமேம்பாலம், அண்ணா நகர் மண்டலத்தில் ரூ. 1.23 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அண்ணா நகர் மண்டலத்துக் குட்பட்ட கும்மாளம்மன் கோயில் தெருவில் உள்ள பல்நோக்கு கட்டடம் ரூ.1.23 கோடி செலவில் சமுதாய நலக் கூடமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நுங்கம்பாக்கம் சுரங்கப் பாதையின் குறுக்கே ரயில்வே நடைமேம்பாலத்தை சுடுகாடு அணுகுசாலையுடன் இணைக்கும் வகையில் ரூ.6.17 கோடி செலவில் 24.6 மீட்டர் நீளம் மற்றும் 5 மீட்டர் அகலம் கொண்ட இரும்பாலான நடைமேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், அண்ணா நகர் மண்டலத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தின் தரைத்தளம் 2,800 சதுர அடி பரப்பளவிலும், முதல் தளம் 2,800 சதுர அடி பரப்பளவிலும் கட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, சட்டப் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் நா. எழிலன், எம். கே. மோகன், மாநகராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி, துணை மேயர் மு. மகேஷ் குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கால்நடை பல்கலை.-அமெரிக்க பல்கலை. ஒப்பந்தம்

சென்னை, ஆக. 16: மாணவர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், அமெரிக்காவில் ஸ்டில்வாட்டரில் உள்ள ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக்கழகத்துடன் 2017-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் தேதி புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களுக்கு இடையே புதிய தொழில் நுட்பங்களை பரிமாறிக் கொள்வதே அதன் முக்கிய நோக்கம்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலம் 2022-ஆம் ஆண்டுடன் நிறைவடையும் நிலையில் இருப்பதால், மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு அதனை புதுப்பிப்பதற்கு ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழுவினர் சென்னைக்கு வந்தனர். அதன்படி, சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் செல்வக்குமார், ஒக்லஹாமா ஸ்டேட் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் கார்லோஸ் ரிஸ்கோ ஆகியோர் தமிழ்நாடு மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் ஒப்பந்தத்தில் செவ்வாய்க்கிழமை கையொப்பமிட்டனர்.

இதுதொடர்பாக துணைவேந்தர் டாக்டர் செல்வக்குமார் கூறியதாவது: ஒக்லஹாமா ஸ்டேட் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து புதிய ஆராய்ச்சி முயற்சிகளை விரிவுபடுத்துவதில் ஆர்வமாக உள்ளது. மாணவர்கள், பயிற்சியாளர்களுக்கு கூட்டு தொழில்முறை மற்றும் பட்டங்களை வழங்க உரிய திட்டங்களை உருவாக்குதல், கால்நடை மருத்துவம், கால்நடை பராமரிப்பு மற்றும் தொடர்புடைய துறைகளில் சிறந்த நடைமுறைகளை உருவாக்குதல் போன்றவை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிறைவேற்றப்படவுள்ளன என்றார் அவர்.


## கடன் வசூல் தீர்ப்பாயம் எண்.2, சென்னை

6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோவ்ஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006

O.A.எண்.381/2017-ல் DRC எண்.133/2021

**கோரிக்கை அறிவிப்பு**

(1961, வருமானவரிச் சட்டம், இரண்டாவது அட்டவணை விதி 2-ன் கீழ் வங்கிகள் மற்றும் கடன் வசூல் & நொடிப்பு நிலை சட்டம் 1993-ல் விதி 29)

பேங்க் ஆஃப் இந்தியா, கதீட்ரல் ரோடு கிளை, 46, கதீட்ரல் ரோடு, சென்னை-600 086. ...சான்றிதழ் வைத்திருப்பவர்

-எதிர்-

சுனிதா.K ...சான்றிதழ் கடன்தாரர்

விஷயத்தில்

பெறுநர்

திருமதி.சுனிதா.K, எண்.19/10, சன்முகம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014. ...சான்றிதழ் கடன்தாரர்

மாண்புமிகு பிரைசிடிங் அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம்-2, சென்னையின் மூலம் 20.12.2021-அன்று வழங்கப்பட்ட ஒரிஜினல் விண்ணப்பம் எண். 381/2017, வசூல் சான்றிதழின் படி (அட்டவணையோடு இணைக்கப்பட்டுள்ளது) சான்றிதழ் கடன்தாரர்களின் அட்டவணை சொத்து மற்றும் பிற சொத்துக்கள் விற்பதன் மூலம் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித் தொகையான ரூ.44,64,778/- (ரூபாய் நாற்பத்தி நான்கு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து எழுநூற்று எழுபத்தெட்டு மட்டும்) மற்றும் ஆண்டுக்கு 9% (சாதாரண) எதிர்கால வட்டி மற்றும் O.A.381/2017 பதிவு செய்த தேதியிலிருந்து அதாவது 14.07.2017 அன்று முதலான கட்டணங்கள் உள்ளிட்ட இதர செலவுகளையும் சேர்த்து, வங்கியானது சான்றிதழ் கடன்தாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட அனைத்து தொகைகள் கழித்துக் கொண்டது போக, மீதமுள்ள பாக்கித்தொகையினை உங்களிடமிருந்து தனியாக வசூலிக்கப்பட வேண்டி உள்ளது. மாண்புமிகு NCLT-ன் உத்தரவின் படியான CP/577/(IB)/CB/2017-ன் நடைமுறைகளுக்கு உட்பட்டே, விற்பனையின் போது விண்ணப்பதாரரான வங்கியின் கடன் தொகைக்கு ஈடான தொகை வசூலாகாத பட்சத்தில் மீதமுள்ள தொகையினை சான்றிதழ் கடன்தாரரான நீங்கள் தனிப்பட்ட முறையில் செலுத்த நேரிடலாம்.

2. இந்த அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்தும்படி இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறீர்கள். தவறினால் விதிகளின் படி வசூல் நடவடிக்கை அமையும்.

3. மேலும் நீங்கள் வருமானவரிச் சட்டம் 1961 இரண்டாவது அட்டவணை விதி 16 மற்றும் வங்கிகள் மற்றும் கடன் வசூல் & நொடிப்பு நிலை சட்டம் 1993 பிரிவு 29-ல் காணும் ஷரத்துகள் படியும் இதன்மூலம் உங்களுக்கு அறிவிப்பதாவது, மீட்பு அதிகாரியின் அனுமதியின்றி, உங்களுக்குச் சொந்தமான எந்தவொரு சொத்தினையும் அடமானம் வைக்க, கடனுக்கு ஈடாக வழங்க குத்தகைக்கு விட அல்லது இதர வகையில் செயல்பட உங்களுக்கு அல்லது உங்களது சார்பாக உங்கள் பிரதிநிதிகளுக்குத் தகுதியில்லை.

4. மேலும் நீங்கள் 12.09.2022 (திங்கட்கிழமை) காலை 11.30 மணியளவில் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அவர்கள் முன்னிலையில் நேரில் ஆஜராகி பணம் செலுத்துவது தொடர்பான விபரங்களை தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இந்த கோரிக்கை அறிவிப்பானது 08.02.2022 தேதியிட்டு சான்றிதழ் கடன்தாரருக்கு பதிவு தபாலில் அனுப்பி, பெறப்படாமல் திரும்பி வந்து விட்ட நிலையில், பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகிறது.

16 ஆகஸ்டு 2022 அன்று எனது கையொப்பமும், முத்திரையும் இட்டு வழங்கப்பட்டது.

(V.சுப்ரமணியன்),
மீட்பு அதிகாரி.

FEDERAL BANK

## தி பெடரல் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஆல்வாய், கேரளா

LCRD / சென்னை டிவிசன்: முதல் தளம், எண்.57, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, EPF அலுவலகம் அருகில், சென்னை-600014. Ph: 044 - 2813 1373, 2813 0988

**விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8(6) சேர்த்துவாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6)-ன்கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

பெடரல் பேங்க்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பெடரல் பேங்க்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடி சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கடன் பெற்றவர்களான 1.Sri.ஹரிஹரன் S. S/o சுப்ரமணியன் சுந்தரம் ஐயர், 2.Smt.சாந்தி R, W/o ஹரிஹரன் S, இருவரது வசிக்கும் முகவரி: எண்.7, ராமகிருஷ்ணபுரம், வில்லிவாக்கம், சென்னை 600 049 மற்றும் மாற்று முகவரி: 2வது தளம், எண்.481, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035 ஆகியோரிடமிருந்து வரவேண்டிய காலக் கடன் (பெடரல் வீட்டு கடன்) கணக்கு எண். 13247300010842-ன் கீழ் செலுத்த வேண்டிய 11.08.2022 அன்றுள்ளபடி ரூ.1,22,33,155.27 (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நூற்று ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்) (இந்த தொகை 10.08.2022 வரை வட்டியுடன்) மற்றும் 11.08.2022 முதல் திரும்ப செலுத்தும் காலம்வரை மாதாந்திர இருப்பின் மீது ஆண்டிற்கு 11.25 % வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளை (28.02.2018 அன்று DRT-1, சென்னையில் தாக்கல் செய்யப்பட்ட OA 128/2018 படி) வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 17.09.2022 அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

சொத்தின் குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.80,00,000/- (ரூபாய் எண்பது லட்சம் மட்டும்) மற்றும் டேவணித்தொகை: ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்).

**அசையா சொத்து விபரம்**

(தெரிந்த வில்லங்கங்கள் எதுவும் இருப்பின், அவற்றுடன்)

தென் சென்னை பதிவு மாவட்டம், நீலங்கரை சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்கள்.439/1A1A1A1A2, 494/2A4A1A2A, 494/11B1A பகுதி, 494/11B2A பகுதி, 494/11B3A பகுதி, 494/12A1, 494/12B, 494/13B & 494/60, சோழிங்கநல்லூர் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா (முன்னர் தாம்பரம் தாலுகா) காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு. ப்ளாட் எண்.404, 4-வது தளம், M ப்ளாக், "தி சென்ட்ரல் பார்க்" எனப்படும் பல அடுக்குமாடி கட்டிடம், எல்காட் அவின்யூ ரோடு, சோழிங்கநல்லூர், சென்னை-600 119 என்னும் முகவரியில் 1663 சதுர அடி ப்ளாட் (பொது பகுதி உட்பட) அதனுடன் ஸ்டில்ட் தளத்தில் ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தும் 2 மூடிய கார் பார்க்கிங் மொத்தமுள்ள 3.75 ஏக்கர் அல்லது 1,63,596.55 சதுர அடி (68.165 கிரவுண்ட்)-ல் 875 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், எல்லைகள் : கிழக்கு : எல்காட் அவின்யூ ரோடு, மேற்கு : சர்வே எண்.602-ல் ரோடு, வடக்கு : சர்வே எண்.494/11B1A பகுதி CMDA வசம் திறந்தவெளி ஒதுக்கப்பட்ட நிலம் மற்றும் சர்வே எண்.494/11B1B, 494/11B2B மற்றும் 494/11B1A-ல் M/s. ஸ்ரீநர் எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு : சர்வே எண்கள்.494/14B மற்றும் 494/12A2-ல் உள்ள சொத்து மற்றும் 40 அடி ரோடு. நீலங்கரை சார் பதிவாளர் அலுவலகம் 17.06.2016 தேதியிட்ட விற்பனை பத்திர எண்.4458/2016-ல் குறிப்பிட்டுள்ளபடி சொத்தானது ஹரிஹரன் S. பெயரிலுள்ளது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பெடரல் பேங்க் லிமிடெட்-ன் இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும் அதாவது: https://federalbank.co.in/web/guest/tender-notices

இடம்: சென்னை
தேதி: 12.08.2022

தி :.பெடரல் பேங்க் லிமிடெட்
(SARFAESI Act கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)

बैंक ऑफ़ बड़ौदा
பாங்க் ஆஃப் பரோடா

சென்னை பெருநகர பிராந்திய அலுவலகம்
எண்.10, 2ம் தளம், சி.பி. ராமசாமி சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை-600018.
போன் : 044-23454329/23454307/23623001

## நகைக்கடன் பொது ஏல அறிவிப்பு

கீழ்க்கண்ட நபர்கள் எங்களது வங்கியின் கீழ்க்கண்ட கிளைகளில் தங்க நகை ஈட்டின் பேரில் நகைக்கடன் பெற்று நாளது தேதி வரை அசலும், வட்டியும் செலுத்தவில்லை என பதிவு தபால் மூலம் ஏல அறிவிப்பு அனுப்பப்பட்டும் நாளது வரையில் கடனை திரும்பச் செலுத்தவில்லை. ஆகையால் 01.09.2022 க்குள் நிலுவைத் தொகை மற்றும் வட்டி இதர தொகைகளையும் செலுத்தி தங்களது நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் கீழே குறிப்பிட்ட கிளைகளில் 02.09.2022 அன்று மாலை 3.00 மணி அளவில் நகைகள் ஏல விடப்படும் என்பதையும் அல்லது வங்கியால் வேறு எந்த அறிவிப்பும் வெளியிடாமல் வேறு வசதியான தேதிக்கு மாற்றுவதற்கும் அதிகாரம் உள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ எண் | கடன் வழங்கப்பட்ட தேதி | கடன் கணக்கு எண் | கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி | நிகர எடை (கிராமில்) |
|---|---|---|---|---|
| | | | புரசைவாக்கம் | |
| 1 | 6.12.2020 | 86630600000771 | திருமதி. J. அமுதா, எண்.3, காந்தி தெரு, திருமங்கலம், அண்ணாநகர், சென்னை - 600040 | 240.9 |
| | | | பெரம்பூர் | |
| 1 | 14.05.2019 | 69460600001239 | K. ரவிசங்கர், எண். 7/275, SRP காலனி, 12வது தெரு, பெரியார் நகர், சென்னை - 600082. | 35.60 |
| 2 | 18.09.2020 | 69460600001117 | வைபம் யுடிலிட்டி மேனேஜ்மெண்ட், எண். 6, முதல் மெயின் ரோடு, ஜவஹர் நகர், சென்னை - 600082 | 11.90 |
| 3 | 28.09.2020 | 69460600001136 | வைபம் யுடிலிட்டி மேனேஜ்மெண்ட், எண். 6, முதல் மெயின் ரோடு, ஜவஹர் நகர், சென்னை - 600082 | 16.00 |

**ஏல தேதி மற்றும் நேரம் : 02.09.2022, மாலை 3.00 மணி**

குறிப்பு : 1. ஏலதாரர்கள் தங்களது KYC விபரங்களை கட்டாயம் கொண்டு வர வேண்டும். 2. ரூ. 10,000 ஏல முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டும். 3. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழுத்தொகையையும் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஏலம் முன்வைப்பு தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

தேதி : 16.08.2022
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

ICICI Home Finance

பெருநிறுவன அலுவலகம் - ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., ICICI HFC டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை-400 059, இந்தியா

கிளை அலுவலகம் : ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 3 வது தளம், M.T. ராஜன்'ஸ் ஸ்கொயர், கதவு எண். 40, பஜுல்லா சாலை, தி நகர், சென்னை-600 017

(பார்க்க - விதி 8 (6) க்கான விதி விலக்கு)

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட். - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் 'இருக்கின்ற இடத்தில்'' ''இருக்கின்ற நிலையில்' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி விற்பனை செய்யப்படும்.

| வ. எண் | கடன்தாரர்(கள்) / கூட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்/ சட்ட வாரிசுகளின் பெயர் / கடன் கணக்கு எண். | அடமானச்சொத்து விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்களுடன்) (ஏதேனும் இருப்பின்) | நிலுவை தொகை (ரூபாயில்) | அடிப்படை விலை / டேவணித் தொகை | சொத்து ஆய்வு தேதி & நேரம் | ஏல தேதி & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | C H சாய்ராம் (கடன்தாரர்) C H தன்ஷிகா (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். LHCTN00001323208 | சர்வே எண். 104/1, பட்டாவின் படி சர்வே எண். 104/1B, ஃப்ளாட் எண். S2, இரண்டாவது தளம், ப்ளாட் எண். 99, கிருஷ்ணா நகர் - III, வரதராபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். | 05.08.2022ம் தேதியின் படி ரூ. 50,40,845/- | ரூ. 35,25,000/- / ரூ. 3,52,500/- | 14.09.2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | 20.09.2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை |
| 2. | K சுகன்யா (கடன்தாரர்) டைனமிக் ஏர்கான் பிரைவேட் லிமிடெட் / S ராகவன் (கூட்டு கடன்தாரர்) / கடன் கணக்கு எண். LHCTN00001303242 | ஃப்ளாட் எண். C8, மூன்றாவது தளம், ''மதிஸ் வர்ஷம்'' விவேகானந்தா நகர் 5 வது தெரு, திருக்கச்சூர் கிராமம், மறைமலை நகர், செங்கல்பட்டு - 631 501 | 05.08.2022ம் தேதியின் படி ரூ. 36,89,190/- | ரூ. 29,01,000/- / ரூ. 2,90,100/- | 14.09.2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | 20.09.2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை |

ஆன்லைன் ஏலமானது, ஏல முகமை க்ளோபல் டெக்-ன் வலைதளம் (URL Link https://BestAuctionDeal.com) ல் நடைபெறும். மொத்த நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்த்து 19.09.2022-ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பு வரை செலுத்த அடமானதாரர் / இவ்வறிவிப்பு வழங்கப்பெற்றவர் ஆகியோருக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது., தவறும் பட்சத்தில் இந்த ஜாமீன் சொத்து/க்கள் பட்டியலிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

விலைகோர உத்தேசித்துள்ளோர் / வாங்குவோர், RTGS / கேட்பு வரைவோலையாக (DD) எடுக்கப்பட்ட மேற்சொன்ன டேவணித்தொகையுடன் (EMD) (களம் ''E'' ல் குறிப்பிட்டவாறு) கூடிய விலைப்புள்ளிகளை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 3 வது தளம், M.T. ராஜன்'ஸ் ஸ்கொயர், கதவு எண். 40, பஜுல்லா சாலை, தி நகர், சென்னை – 600 017 ல் 19.09.2022-ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு முன்பே, சமர்ப்பிக்க வேண்டும்., விருப்பமுள்ள ஏலதாரர்(கள்) தங்களது விலைப்புள்ளிகளை வலைதளம் மூலம் சமர்ப்பிக்க இயலவில்லையெனில், தமது கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்., 3 வது தளம், M.T. ராஜன்'ஸ் ஸ்கொயர், கதவு எண். 40, பஜுல்லா சாலை, தி நகர், சென்னை–600 017 என்ற முகவரிக்கு 19.09.2022-ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முன்பே கிடைக்குமாறு அனுப்பலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும். டேவணித்தொகையானது. கேட்பு வரைவோலையாக (DD) ஏதேனும் தேசியமயாமாக்கப்பட்ட / பட்டியலிடப்பட்ட வங்கியில் ''ICICI HOME FINANCE COMPANY LIMITED'' என்ற பெயரில் சென்னையில் செலுத்தக்கவாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், சொத்து ஆய்வு, ஏலம் அல்லது விலைப்புள்ளி சமர்ப்பிப்பு தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படுமாயின், ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ன் அலைபேசி எண்கள் - 70210 72869 அல்லது NexXen Solutions Private Limited - யை தொடர்பு கொள்ளலாம்.

அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு அல்லது அனைத்து ஏலம் / விலைப்புள்ளியை தள்ளுபடி செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ உண்டான உரிமையை தன்னகத்தே வைத்துள்ளார்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.icicihfc.com/ யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

தேதி : 17.08.2022
இடம் : சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

VISTAAR FINANCE

## விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மனை எண் 59 & 60 - 23, 22ஆவது குறுக்கு, 29ஆவது மெயின், BTM லேஅவுட் 2ஆவது கட்டம், பெங்களூரு - 560076.
கிளை அலுவலகம்: பனானா பிளாசா, எண் 73 & 74, 2ஆவது தளம், ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024, ராம் திரையரங்கம் அருகில்.

**அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8 & 9 ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானத்தில் இருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 8 & 9 ஆகியவற்றின் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்புக்கு இணங்க விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவை ஆகும். இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ளது இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் 06.09.2022 அன்று E-ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. இந்தப் பொது ஏலத்தை https://sarfaesi.auctiontiger.net எனும் e-ஏல இணையத்தளத்தில் நாங்கள் நடத்த உள்ளோம் என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| 1. கடன்தாரர், கூட்டுக் கடன்தாரர், அடமானதாரர் பெயர் 2. கணக்கு எண் | சொத்து / சொத்துக்கள் விவரம் | A) கோரிக்கை அறிவிப்பு நாள் B) சுவாதீன நாள் C) நிலுவைத்தொகை | A. குறைந்தபட்ச விலை B. டேவணித்தொகை (EMD) C. ஏல உயர்வுத் தொகை | A. E-ஏல நாள் மற்றும் நேரம் B. டேவணித்தொகை செலுத்தக் கடைசி நாள் C. சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. திரு/திருமதி. சுப்பிரமணியம் பழனிச்சாமி 2. திரு/திருமதி. சந்திரா சுப்பிரமணியம் கணக்கு எண் - 0211SBML00631 | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய அசையாச் சொத்து. இது தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. சொத்தின் பரப்பளவு 3 செண்ட் (1308 சதுர அடி) நிலம் மற்றும் கட்டடம், மனை எண் 222/A. அமைவிடம் - எண் 10/5, செங்கேணியம்மன் கோயில் தெரு, கணபதிபுரம், இரும்புலியூர் கிராமம், சர்வே எண் 176/1. இது தாம்பரம் நகராட்சி, தாம்பரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்ட எல்லைகளுக்கு உட்பட்டு அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு : செங்கேணியம்மன் கோயில் 1ஆவது குறுக்குத் தெரு, தெற்கு : திரு.சந்திரமோகன் மற்றும் கனியம்மாள் ஆகியோரின் மனை, கிழக்கு : செங்கேணியம்மன் கோயில் குறுக்குத் தெரு, மேற்கு : காவலருக்குச் சொந்தமான மனை. | A) கோரிக்கை அறிவிப்பு நாள் 15.12.2021 B) அடையாள சுவாதீன நாள் 19.04.2022 C) கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத்தொகை ரூ.41,77,252.59 D) சுவாதீன முறை – நேரடி சுவாதீனம் | A. குறைந்தபட்ச விலை ரூ.38,00,000/- B. டேவணித்தொகை (EMD) ரூ.3,80,000/- C. ஏல உயர்வுத் தொகை ரூ.5,000/- | A. E-ஏல நாள் மற்றும் நேரம்: 06.09.2022 – முற்பகல் 11:30 மணி முதல் பிற்பகல் 12:30 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடம் காலநீட்டிப்புடன்) B. டேவணித்தொகையை வாடிக்கையாளர் விவர ஆவணங்களுடன் (KYC) செலுத்தக் கடைசி நாள்: 05.09.2022 – மாலை 5:00 மணி C. சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம்: 20.08.2022 மற்றும் 27.08.2022 - முற்பகல் 11:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை |

1) ஆர்வமுள்ள பங்கேற்பாளர்கள் / ஏலதாரர்கள் https://sarfaesi.auctiontiger.net மற்றும் www.vistaarfinance.com இணையத்தளங்களுக்கு வருகை புரியுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் விவரங்கள், உதவி, e-ஏல நடைமுறை மற்றும் இணையவழிப் பயிற்சி ஆகியவற்றைப் பெற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: M/s. e-புராகியூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிட்., தொடர்புக்கு: திரு.ராம் சர்மா, தொடர்பு எண்: 8000023297/ 079-61813 6803, மின்னஞ்சல்: ramprasad@auctiontiger.net, support@auctiontiger.net. 2) E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக மேலும் விவரங்களுக்கு வருகை புரிக: https://sarfaesi.auctiontiger.net மற்றும் www.vistaarfinance.com. 3) வில்லங்க விவரம்: அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் ஏதும் இல்லை. எனினும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த முயற்சியின் பேரில் விசாரித்துக் கொள்ள வேண்டுகிறோம். 4) டேவணித்தொகை (EMD) செலுத்துவதற்கான விவரங்கள்: Vistaar Financial Services Pvt Ltd எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய கணக்கு எண்: 910020011630601, ஆக்சிஸ் வங்கி லிட்., IFSC எண் UTIB0000052. 5) மேலும் விவரங்களுக்கும், கேள்விகளுக்கும், சொத்து ஆய்வுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடின் உரிய அலுவலர்: திரு. பழனிவேல் D (கைப்பேசி எண்: 9791785094). இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன்படி கடன்தாரருக்கான / கூட்டுக் கடன்தாரருக்கான / அடமானதாரர்களுக்கான / ஜாமீன்தாரர்களுக்கான 15 நாள் அறிவிப்பாகவும் கருதப்படும்.

இடம்: சென்னை, நாள்: 17.08.2022 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

''ஹாரிங்டன் சேம்பர்ஸ்'', பிளாக் எண். C, எண். 30/1A,
அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
Ph: 044-42010374

LIC HFL
LIC HOUSING FINANCE LTD

**சொத்து சுவாதீன அறிவிப்பு**

REF/LA/510600008045/510600008183 - 2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன் அமல்படுத்துதல் சட்டத்தின் கீழ் மற்றும் 2002 பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகளின் 8-ம் விதியுடன் பிரிவு 13(2) என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்தும் வகையில் கடன் எண். 510600008045-க்காக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.1,25,30,029.40/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து இருபத்து ஒன்பது ரூபாய் மற்றும் நாற்பது பைசா மட்டும்) மற்றும் கடன் எண். 510600008183-க்காக ரூ.10,63,181.95/- (ரூபாய் பத்து இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நூற்று எண்பத்து ஒன்று மற்றும் தொன்னூற்று ஐந்து பைசா மட்டும்) என்ற தொகையுடன் மாதாந்திர ரீதியில் ஒப்பந்த வீதத்தில் எதிர்கால வட்டியையும் சேர்த்து கேட்பு அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரி கடன்தாரர் திரு. மணி பிரகாஷ் அவர்களுக்கு 12.04.2019-லிருந்து செயல்விளைவு பெறும் வகையில், கீழே கையொப்பமிட்டுள்ள எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் 11.04.2019 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு தரப்பட்டது.

இத்தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர் தவறியிருப்பதால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறப்பட்ட விதிகளின் 8-வது விதி மற்றும் சட்டத்தின் 13(4) ஆம் பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செயல்படுத்தி, திரு. மணி பிரகாஷ் அவர்களுக்கு சொந்தமான கீழே விவரணை செய்யப்பட்டுள்ள சொத்தை 12.08.2022 தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார் என்று குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் வழியாக அறிவிப்பு தரப்படுகிறது.

இந்த சொத்து குறித்து எந்த பரிவர்த்தனை நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டாம் என்று குறிப்பாக கடன்தாரரும் மற்றும் பொதுவாக பொதுமக்களும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள் மற்றும் அதை மீறி இந்த சொத்து குறித்து எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது கடன் எண். 510600008045-க்காக ரூ.1,25,30,029.40/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து இருபத்து ஒன்பது ரூபாய் மற்றும் நாற்பது பைசா மட்டும்) மற்றும் கடன் எண்.510600008183-க்காக ரூ.10,63,181.95/- (ரூபாய் பத்து இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நூற்று எண்பத்து ஒன்று மற்றும் தொன்னூற்று ஐந்து பைசா மட்டும்) என்ற தொகையுடன், 12.04.2019 தேதியிலிருந்து செயல்விளைவு பெறும் வகையில் மாதாந்திர ரீதியில் ஒப்பந்த வீதத்தில் எதிர்கால வட்டியையும் சேர்த்து எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-க்கு செலுத்தப்படுவதற்கு கட்டுப்பட்டதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**அசையா சொத்துக்களின் விவரணை - அட்டவணை**

கீழ்க்கண்ட அடுக்குமாடி குடியிருப்பு வீட்டு (ஃபிளாட்) சொத்தில் அடங்கியுள்ள அனைத்தும்,

உருப்படி 1: சென்னை மாநகராட்சி வரம்பெல்லைகளுக்குள் சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள், சென்னை மாநகராட்சி, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் பெரம்பூர் வட்டம், பெரவள்ளூர் கிராமத்தின் வரம்பெல்லைகளுக்குள், வடக்கில்: மனை எண். B-239 மற்றும் C-340, தெற்கில்: 80 அடி சாலை 6வது மெயின் ரோடு, கிழக்கில்: மனை எண். A-33 மற்றும் மேற்கில்: 40 அடி சாலை ஆகிய நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு சென்னை மாவட்டத்தின் புரசைவாக்கம் பெரம்பூர் வட்டத்தில் அயனாவரம் கிராமத்தில் மனை எண். 32, வகை A, பழைய எண். 28, புதிய எண். 8, R.S. எண். 348/1, 347 & 348/2, T.S. எண். 71, பிளாக் நம்பர். 42, 6வது மெயின் ரோடு, ஜவஹர் நகர், சென்னை 600082 என்ற முகவரியில் J.C's சுவாதி பேலஸ் என்ற பெயருள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் 7955 சதுர அடி என்ற மொத்த பரப்பளவு நிலத்தில் 417 சதுர அடி (38.74 சதுர மீட்டர்) என்ற பகுபடா பங்கு நிலத்துடன் இரண்டாவது தளத்தில் 962 சதுர அடி கட்டப்பட்ட கட்டிட பரப்பினை கொண்டுள்ள ஃபிளாட்/ அடுக்குமாடி குடியிருப்பு வீடு: B-2.

உருப்படி 2: சென்னை மாநகராட்சி வரம்பெல்லைகளுக்குள் சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் துணைப்பதிவு மாவட்டத்திற்குள், சென்னை மாநகராட்சி, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் பெரம்பூர் வட்டம், பெரவள்ளூர் கிராமத்தின் வரம்பெல்லைகளுக்குள், வடக்கில்: மனை எண். B-239 மற்றும் C-340, தெற்கில்: 80 அடி சாலை 6வது மெயின் ரோடு, கிழக்கில்: மனை எண். A-33 மற்றும் மேற்கில்: 40 அடி சாலை ஆகிய நாற்புற எல்லைகளால் சூழப்பட்டு சென்னை மாவட்டத்தின் புரசைவாக்கம் பெரம்பூர் வட்டத்தில் அயனாவரம் கிராமத்தில் மனை எண். 32, வகை A, பழைய எண். 28, புதிய எண். 8, R.S. எண். 348/1, 348 & 348/2, T.S. எண். 71, பிளாக் நம்பர். 42, 6வது மெயின் ரோடு, ஜவஹர் நகர், சென்னை 600082 என்ற முகவரியில் J.C's சுவாதி பேலஸ் என்ற பெயருள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் 7955 சதுர அடி என்ற மொத்த பரப்பளவு நிலத்தில் 519 சதுர அடி (48.21 சதுர மீட்டர்) என்ற பகுபடா பங்கு நிலத்துடன் இரண்டாவது தளத்தில் 1202 சதுர அடி கட்டப்பட்ட கட்டிட பரப்பினை கொண்டுள்ள ஃபிளாட்/ அடுக்குமாடி குடியிருப்பு வீடு: B-4.

தேதி: 12/08/2022 இடம்: சென்னை அங்கீகாரம் பெற்ற அதிகாரி, எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!